[2015 செப்டம்பர் 16

***திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நல்லதொரு தீர்மானம், அவையிலே நிறைவேறியிருக்கிறது. அவையில் அனைவரும் சந்தோஷமாக இருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) அவையில் அனைவரும் சந்தோஷமாக இருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) அடுத்த அலுவலுக்குப் போகலாம். (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், சொல்லுங்கள்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சந்தோஷமாகத்தான் சொல்கிறேன். நாங்கள் கொடுத்த அறிவிப்புகளெல்லாம் ஆய்விலே இருக்கிறதே; அந்த ஆய்வுகள் முடிந்ததா? எப்பொழுது முடியும்?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்ளப்படும். இன்றைக்கு உங்களுடைய கட்சி உறுப்பினர் கொடுத்திருப்பதைத்தான் எடுத்திருக்கிறேன். (குறுக்கீடு)*

திரு. துரைமுருகன்: *எப்பொழுது ஆய்வு செய்வீர்கள்? என்ன ஆய்வு செய்கிறீர்கள்? அதை ஆராய்ச்சி செய்திருந்தால் நீங்கள்* Doctorate *வாங்கியிருக்கலாம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சொல்வதைக் கேளுங்கள். இன்றைக்குக்கூட உங்களுடைய கட்சி உறுப்பினர் கொடுத்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பினைத்தான் எடுத்துக் கொண்டிருக்கிறேன். (குறுக்கீடு) 'உங்களுடையது' என்றால், உங்களுடைய கட்சி உறுப்பினருடையதுதான். (குறுக்கீடு) திரு. அ. சௌந்தரபாண்டியன், உங்களுடைய கட்சி உறுப்பினர்தானே? (குறுக்கீடு) அவர் கொடுத்திருக்கிற கவன ஈர்ப்பினைத்தான் நான் எடுத்திருக்கிறேன்.*

4. கவன ஈர்ப்பு

லால்குடி, பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிக்குக் கட்டடம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உயர் கல்வித்*

2015 செப்டம்பர் 16] [பேரவைத் தலைவர்]

துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன் அவர்கள்.

***திரு. அ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "லால்குடியில், பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிக்குக் கட்டடங்கள் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

அரசாணை (நிலை) எண் 374, உயர் கல்வி (ஜி-1)த் துறை, நாள் 11-9-2008-ல், திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடியில் பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி துவங்குவதற்கு ஆணை வெளியிடப்பட்டது. அவ்வாறு துவங்கப்பட்ட கல்லூரிக்கு நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்கு ஏதுவாக, திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டம், குமுளூர் கிராமம், புல எண் 572/1-ல், மொத்தப் பரப்பளவு 6.50.0 ஹெக்டேர் நிலத்தில், 3.90.0 ஹெக்டேர் பரப்பளவு "அரசு புறம்போக்கு" என வகைப்படுத்தப்பட்ட நிலத்தினை உயர் கல்வித் துறைக்கு நில மாற்றம் செய்து, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அவர்களின் 21-11-2014 நாளிட்ட செயல்முறைகள் வாயிலாக ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

அரசாணை (நிலை) எண் 81, உயர் கல்வி (டி1)த் துறை, நாள் 23-4-2015-ல், திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடியில் இயங்கிவரும் பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு ரூ.725.00 இலட்சம் மதிப்பீட்டில் நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்கு ஏதுவாக, மாநில அரசின் பங்கான ரூ.483.32 இலட்சம் தொகை நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

பொதுப் பணித் துறை, தொழில்நுட்பக் கல்விக் கோட்டத்தால் 12-8-2015 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, பரிசீலனையில் உள்ளன. அக்கல்லூரிக்கு நிரந்தரக் கட்டடம் 4,081 சதுர மீட்டர் பரப்பளவில் கட்டப்படவுள்ளது. தரைத் தளத்தில் அலுவலக அறை, நூலகம், சேமிப்பறை, வகுப்பறைகள் மற்றும் சுகாதார அறை ஆகியன அமையவுள்ளன. முதல் தளம் மற்றும் இரண்டாம் தளங்களில் ஆய்வுக்கூடங்கள், கருத்தரங்குக் கூடம், கணினி அறை மற்றும் வகுப்பறைகள் ஆகியன அமையவுள்ளன. இக்கல்லூரிக்கான கட்டுமானப் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன் அவர்கள்.

திரு. அ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். லால்குடி தொகுதி, குமுளூரில் இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளதாகவும், ரூபாய் 483 இலட்சம் மதிப்பீட்டில் கட்டடம் கட்டும் பணி தொடங்கப்பட உள்ளதாகவும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவர அறிக்கையிலே தெரிவித்திருக்கிறார்கள். அந்த இடம், திருச்சி-சிதம்பரம் தேசிய நெடுஞ்சாலையிலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவிலும், போக்குவரத்து மிக மிகக் குறைவான பகுதியாகவும் இருக்கின்றது. அந்த இடத்தில் கல்லூரிக்குக் கட்டடம் கட்டப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2008-ல் அந்தக் கல்லூரி தொடங்கப்பட்டபோது, 1,300 ஆக இருந்த மாணவர்களின் எண்ணிக்கையானது, இன்றைக்கு ஆயிரத்திற்கும் குறைவாக உள்ளது. எனவே, போக்குவரத்துக்கு உகந்ததாக இல்லாத அந்தப் பகுதியில், இடம் தேர்வு செய்யப்பட்டு கல்லூரிக்குக் கட்டடம் கட்டப்பட்டால், மாணவர்களின் எண்ணிக்கை மேலும் குறையக்கூடிய சூழ்நிலை ஏற்படும்.

அதோடுமட்டுமல்லாமல், இப்பொழுது கல்லூரி இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய லால்குடி ஊராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தமான அண்ணா திருமண மண்டபத்திற்கு அருகில், கூட்டுறவுத் துறைக்குச் சொந்தமாக 25 ஏக்கர் நிலம் உள்ளது. அந்த இடத்தில் இந்தக் கல்லூரியைக் கட்டினால், போக்குவரத்துக்கு உகந்ததாக இருக்கும். அனைத்துப் பகுதிகளிலிருந்தும் வந்து, மாணவர்கள் கல்வி கற்பதற்கு தகுதியான இடமாக அது இருப்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைப் பரிசிலனை செய்து, இடத்தினை மாற்றி, ஆங்கரை

2015 செப்டம்பர் 16] [திரு. அ. சௌந்தரபாண்டியன்]

பகுதியிலே கட்டடங்களைக் கட்டிக் கொடுப்பதற்கு முன்வருவார்களா என தங்கள்மூலம் அரசின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008-ல் இந்தக் கல்லூரி தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. ஏற்கெனவே லால்குடி வட்டம், குமுளூர் கிராமத்தில் இந்தக் கல்லூரிக்கு நிரந்தரமாகக் கட்டடம் கட்டுவதற்கு 9.63 ஏக்கர் இடத்தினைத் தேர்வு செய்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அரசுக்குக் கருத்துருவை அனுப்பியிருந்தார்கள். அதனடிப்படையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 12-6-2015-ல் அந்தக் கல்லூரிக்குக் கட்டடம் கட்டுவதற்கு அடிக்கல்லையும் நாட்டியிருக்கிறார்கள். 12-8-2015-ல் டெண்டர் பணி முடிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, தற்போது அங்கே கட்டடம் கட்டும் பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அங்கே கட்டடம் கட்டுவதற்காக 7 கோடியே 25 இலட்சம் ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். இது பாரதிதாசன் பல்கலைக்கழகத்தினுடைய உறுப்புக் கல்லூரி. அந்த உறுப்புக் கல்லூரியைப் பொறுத்தவரையில், அது* Non-model College, *அதாவது மாதிரி அல்லாத கல்லூரி. அந்தக் கல்லூரிக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் மாநில அரசின் பங்காக 4 கோடியே 83 இலட்சத்து 32 ஆயிரம் ரூபாயும், பல்கலைக்கழகத்தினுடைய பங்காக 2 கோடியே 41 இலட்சத்து 68 ஆயிரம் ரூபாயும், ஆக மொத்தம் 7 கோடியே 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 'தற்போது புதிதாகக் கல்லூரிக்கு கட்டடப் பணி தொடங்கப்பட்டிருக்கும் குமுளூர் கிராமம் தொலைதூரத்தில் இருக்கிறது, ஆகவே, தேசிய நெடுஞ்சாலையில் அந்தக் கல்லூரியைத் தொடங்க வேண்டும்' என்ற கோரிக்கையை வலியுறுத்தி வருகிறார்கள். பொதுவாக, நகரங்களை நோக்கியே உயர் கல்வி என்றிருந்த நிலை மாறி, கிராமங்களை நோக்கி உயர் கல்வி என்ற நிலையை உருவாக்கித் தந்த பெருமை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)*

[திரு. பி. பழனியப்பன்] [2015 செப்டம்பர் 16

முற்பகல் 11-50

கிராமப்புறங்களிலே உயர் கல்வி நிறுவனங்களை ஏற்படுத்தி, கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய ஏழை, எளிய மாணவர்கள் உயர் கல்வி பெற வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 4 ஆண்டுகளில் 38 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் தந்து, இன்றைக்கு உயர் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கையை உயர்த்தியிருக்கிறார்கள்.

அந்தவகையில், 2008 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அந்தக் கல்லூரிக்கு 2008-2009, 2009-2010 மற்றும் 2010-2011 ஆகிய 3 ஆண்டுகளில் கல்லூரிக்கான நிலம் கண்டறியப்படாமல் இருந்தது. அந்தக் கல்லூரி கடந்த ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்ட கல்லூரியாக இருந்தாலும், அதற்கு நிரந்தரக் கட்டடம் கட்டப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கிராமப்புறங்களில் மாணவர்களுக்கு உரிய முறையில், செலவில்லாமல் அனைவரும் ஒருங்கிணைந்த உயர் கல்வி பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த உயர் கல்வி நிறுவனங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, கூடிய விரைவில் அந்தக் கல்லூரிக்குக் கட்டடம் கட்டப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கரங்களால் நிச்சயமாகத் திறந்து வைக்கப்படும்.

ஏற்கெனவே நிலம் கண்டறியப்பட்டுள்ளது; மீண்டும் அந்த இடத்தை மாற்ற வேண்டுமென்று சொன்னால், காலதாமதம் ஏற்படும். ஏற்கெனவே மாணவர்கள் வாடகைக் கட்டடத்தில் கல்வி பயின்று வருகிறார்கள். தற்பொழுது, அந்தக் கல்லூரியில் 917 மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கின்றார்கள். அதுவும், இரண்டு இடங்களில் படித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாணவர்களின் நலன் கருதி, தற்பொழுது தேர்வு செய்யப்பட்டுள்ள இடத்திலேயே கூடிய விரைவில் கல்லூரிக்கான கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கரங்களால் திறந்து வைக்கப்பட்டு, அந்தப் பகுதி மக்களின் தேவை பூர்த்தி செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2015 செப்டம்பர் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன் அவர்கள்.*

திரு. அ. சௌந்தரபாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் கல்லூரியாக இருந்தால் அவர்கள் பேருந்துகளை வைத்து மாணவர்களை தற்பொழுது தேர்வு செய்யப்பட்டிருக்கக்கூடிய இடத்திற்குக் கொண்டு வந்து சேர்ப்பதற்கு வசதியான இடமாக இருக்கும். அது அரசுக் கல்லூரியாக இருப்பதனால், அதுபோன்று நாம் செய்ய இயலாது. அதோடுமட்டுமல்லாமல், அந்தக் கல்லூரி தொடங்கப்பட்டபொழுது, ஏற்கெனவே அந்தப் பகுதியில் அரசு விவசாயக் கல்லூரியும், கூட்டுறவு பாலிடெக்னிக் கல்லூரியும் தொடங்கப்பட்ட காரணத்தினால், அரசுக்கு பங்களிப்புத் தொகை செலுத்தினால்தான் அந்தக் கல்லூரி தொடங்கப்படும் என்று அன்றைய அரசு தெரிவித்த நிலையில், அந்தப் பகுதி மக்களின் சார்பாக ஒரு கோடி ரூபாய் பங்களிப்புத் தொகையாக அரசுக்கு செலுத்தித்தான் அந்தக் கல்லூரி தொடங்கப்பட்டது. எனவே, ஏழை, எளிய மக்கள், விவசாயத் தொழிலாளர்கள் நிறைந்த அந்தப் பகுதி மக்கள் கல்வித் தரத்தை உயர்த்திக் கொள்வதற்கு, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கருணைகூர்ந்து இதைப் பரிசீலனை செய்து, இடத்தை மாற்றி, ஆங்கரை கிராமத்தில் கல்லூரிக்குக் கட்டடம் கட்டிக் கொடுப்பதற்கு முன்வர வேண்டும் என்று தங்கள் மூலமாக அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்கள் நன்கொடையாக பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்கு 1 கோடியே 25 இலட்சம் ரூபாய் கட்டியிருக்கிறார்கள். அந்த பொதுமக்கள் நன்கொடையான 1 கோடியே 25 இலட்சம் ரூபாய் தமிழ்நாடு மின் நிதிக் கழகத்தில் டெபாசிட் செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது டெபாசிட் செய்யப்பட்ட தொகை, வட்டியுடன் சேர்த்து வங்கியில் 1,78,78,955 ரூபாயாக உள்ளது. ஏற்கெனவே கல்லூரிக் கட்டடம் கட்டுவதற்காக தேர்வு செய்யப்பட்ட இடம் சற்று மேடும், பள்ளமுமாக இருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் அந்தக்*

[திரு. பி. பழனியப்பன்] [2015 செப்டம்பர் 16

கல்லூரிக்குக் கட்டடம் கட்டுவதற்காக 7 கோடியே 25 இலட்சம் ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். ஆனால், 7 கோடியே 97 இலட்சம் ரூபாய் தேவைப்படுவதால், பொதுமக்கள் நன்கொடையாக டெபாசிட் செய்துள்ள தொகையிலிருந்து 72 இலட்சம் ரூபாயை எடுத்து, நிலத்தை சமன் செய்ய செலவிட்டு, முழு அளவில் கல்லூரிக்குக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இடத்தை மாற்ற வேண்டும் என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகிறார். தொலைதூரத்திலுள்ள கிராமப்புற மாணவர்களும் உயர் கல்வி பெற வேண்டும் என்பதே அரசின் நோக்கமாகும். ஆகவே, அந்த வகையில் மீண்டும் ஒரு முறை இடத்தை மாற்றினால் காலதாமதம் ஏற்படும். ஏற்கெனவே 2008-ல் நீங்கள் ஆரம்பித்த கல்லூரி. உங்களுக்குக் கட்டடம் கட்ட மூன்று ஆண்டு காலம் இருந்தது. அந்த 3 ஆண்டுகளிலே நிலத்தைத் தேர்வு செய்யாமல் காலதாமதம் செய்ததால், தற்போது மாண்புமிகு அம்மா அவர்களின் முயற்சியோடும், ஆசியோடும், இடத்தைத் தேர்வு செய்து கட்டடம் கட்டி வருகிறோம்.

தற்போதைய காலகட்டத்தில் போக்குவரத்து என்பது பிரச்சினை இல்லை. கிராமப்புற மாணவர்கள் பயன்பெறுவதற்காக உயர் கல்வி நிறுவனங்களைத் தந்ததோடு, எங்கெங்கெல்லாம் போக்குவரத்து வசதி இல்லையோ அங்கெங்கெல்லாம் போக்குவரத்து வசதியை உருவாக்கிக் கொடுத்த பெருமை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உண்டு. ஆகவே, மீண்டும் இடத்தை மாற்ற வேண்டுமென்று வலியுறுத்தாமல், அந்த இடத்திலேயே கல்லூரிக்குக் கட்டடம் கட்டுவதற்கும், தற்பொழுது வாடகைக் கட்டடத்தில் படித்துக் கொண்டிருக்கக்கூடிய மாணவ, மாணவிகளின் நிலையை அறிந்து, கூடிய விரைவில் கட்டடம் கட்டுவதற்கும் மாண்புமிகு உறுப்பினர் ஒத்துழைப்பு நல்க வேண்டும். கட்டடம் கட்டி முடிக்கப்பட்ட பின்னர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கரங்களால் நல்ல முறையில் திறந்து வைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)